## போலீசார் தாக்கியதில்

# வாலிபர் உயிரிழந்த வழக்கு சிபிசிஐடிக்கு மாற்றம்

**மதுரை, ஏப். 18:** தஞ்சை மாவட்டம், கும்பகோணத்தை சேர்ந்த வள்ளி, ஐகோர்ட் மதுரை கிளையில் தாக்கல் செய்த மனு:

என் மகன் சிலம்பரசன், கடந்த 9ம் தேதி கும்பகோணம் சத்திரம் குளத்தில் உயிரிழந்த நிலையில் மிதந்தார். ஒரு வழக்கு விசாரணைக்காக கும்பகோணம் நீதிமன்றத்தில் ஆஜராக வந்தபோது போலீசார் விரட்டியுள்ளனர். அவர்களிடம் இருந்து தப்பிக்க முயன்றுள்ளார். அப்போது போலீசார் தாக்கியதில் படுகாயமடைந்து, தண்ணீர் மூழ்கியிருக்கலாம். அவசரம், அவசரமாக பிரேத பரிசோதனை செய்துள்ளனர். உடலில் பல இடங்களில் காயம் உள்ளது. எனது மகன் மரணத்தில் சந்தேகம் உள்ளது. எனவே, புதைக்கப்பட்ட என் மகன் உடலை தோண்டி எடுத்து 2 டாக்டர்கள் முன்னிலையில் மறு பிரேத பரிசோதனை செய்யவும், முழுமையாக வீடியோ பதிவு செய்யவும், என் மகன் உயிரிழப்புக்கு காரணமான போலீசார் மீது உரிய நடவடிக்கை எடுக்கவும் உத்தரவிட வேண்டும். இவ்வாறு மனுவில் கூறியிருந்தார்.

இந்த மனுவை ஏற்கனவே விசாரித்த நீதிபதி இளங்கோவன், மனுவிற்கு கும்பகோணம் தாலுகா இன்ஸ்பெக்டர் தரப்பில் பதிலளிக்க உத்தரவிட்டு விசாரணையை தள்ளி வைத்தார். இந்நிலையில், இந்த மனு நீதிபதி இளங்கோவன் முன்பு நேற்று விசாரணைக்கு வந்தது.

இந்த வழக்கை சிபிசிஐடி.க்கு மாற்றி உத்தரவிட்ட நீதிபதி, சிலம்பரசனின் உடலை தஞ்சை மருத்துவக்கல்லூரி தடயவியல்துறை பேராசிரியர்கள் கொண்ட குழுவினர் வழிகாட்டுதலை பின்பற்றி, ஏப்.20ல் மறு பிரேத பரிசோதனை செய்ய வேண்டும். முழுமையாக வீடியோவில் பதிவு செய்து, மறு பிரேத பரிசோதனையின் அறிக்கையை ஏப்26ல் தாக்கல் செய்ய வேண்டுமென உத்தரவிட்டு, விசாரணையை தள்ளி வைத்தார்.

தினகரன் Sun, 18 April 2021
https://epaper.dinakaran.com/c/59869778